செய்தி வெளியீடு எண் :2100 நாள் : 22.11.2022

**கடந்த வாரத்தில் கனமழை பெய்து, நீர் வடிந்துள்ள நிலையில், தற்போது விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த வேளாண்மை உழவர் நலத்துறையின் செய்தி.**

**பெய்த மழையளவு**

தமிழகத்தின் ஆண்டு முழுவதும் இயல்பாக 937.50 மிமீ மழை பெய்கிறது. இதில், அக்டோபர் முதல் டிசம்பர் முடிய வடகிழக்குப் பருவத்தில், 448 மிமீ (48%) மழையளவு கிடைக்கிறது. அக்டோபர் 1 ஆம் தேதி முதல் நவம்பர் 17 ஆம் தேதி வரை இயல்பாக பெய்ய வேண்டிய 288.3 மி.மீட்டருக்கு 327.9 மி.மீ மழை அதாவது 14 சதவிகிதம் கூடுதலாக பெய்துள்ளது. மாவட்ட வாரியாக ஆய்வு செய்தால், 2 மாவட்டங்களில் இயல்பை விட 60 சதவிகிதம் கூடுதலாகவும், 12 மாவட்டங்களில் 20 முதல் 59 சதவிகிதம் கூடுதலாகவும், 21 மாவட்டங்களில் இயல்பான மழையும் பெய்துள்ளது. குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் 722.1 மி.மீட்டரும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 516.7 மி.மீட்டரும், கடலூர் மாவட்டத்தில் 485.9 மி.மீட்டரும் பெய்துள்ளது.

இதனால், இம்மாவட்டங்களில் விளைநிலங்களில் மழைநீர் தேங்கி, நெல் பயிர் உட்பட பல்வேறு பயிர் நீரில் மூழ்கி, தற்போது வடிந்து வருகிறது. இத்தருணத்தில் விவசாயிகள் சில முக்கிய பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதன் விபரம் பின்வருமாறு.

**விவசாயிகள் பொதுவாக பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்**

1. விளை நிலங்களில் உள்ள சிறு பாசன மற்றும் வடிநீர் வாய்க்கால்களில் உள்ள, செடி கொடிகளை அகற்றிட வேண்டும்.
2. மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உள்ள அதிகப்படியான நீரை உரிய வடிகால் வசதியினை உருவாக்கி வெளியேற்ற வேண்டும்.
3. மழைக்காலங்களில் உரம் இடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களைக்கொல்லி இடுதல் போன்றவற்றை தவிர்த்திட வேண்டும்.

**நெல் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள்**

1. மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதியை ஏற்படுத்தி நீரினை வடித்து, வேர்ப்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. நெல் பயிர் நீரில் மூழ்கி இருந்தால், ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது மழை நின்று நீர் வடிந்து வருவதால், ஊட்டச்சத்து பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு, நீர் வடிந்த பிறகு ஏக்கருக்கு 22

கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சத்துடன், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, இரவு முழுவதும் வைத்திருந்து தண்ணீர் வடிந்தவுடன் வயலில் இட வேண்டும்.

3. போதிய சூரிய வெளிச்சம் தென்பட்டவுடன், ஏக்கருக்கு 2 கிலோ யூரியாவுடன், ஒரு கிலோ துத்தநாக சல்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் இலை வழி உரமாக தெளிக்க வேண்டும்.
4. முன்சம்பா பருவத்தில் நடவு செய்துள்ள நெல் பயிர் தண்டு உருளும் பருவம் முதல் பூக்கும் பருவத்தில் இருந்தால், ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தினை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் ஊறவைத்து மறுநாள் வடிகட்டி, கரைசலுடன் 2 கிலோ யூரியா, 1 கிலோ பொட்டாஷ் உரத்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.
5. மழைக்காலத்தில் புகையான் தாக்குதல் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதால், வேம்பு சார்ந்த அசாடிராக்டின் 0.03 சதவீத மருந்தினை எக்டருக்கு 1000 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
6. தற்போது, மேகமூட்டமாக உள்ளதால், பயிரின் தேவைக்கும் அதிகமாக இரசாயன உரமிடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பருவ மழையினால் பயிர்கள் பாதிக்கப்படும் நேரத்தில் கிராமத்திற்குச் சென்று, பயிரைக் கண்காணித்து விவசாய பெருமக்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கி அவர்களுக்கு உறுதுணையாக பணியாற்ற வேண்டும் என்று வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கூடுதல் தகவல் ஏதும் வேண்டும் என்றால், உங்கள் அருகாமையில் உள்ள துறை அலுவலர்களை அணுகி பயன்பெறுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசுச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in